PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 2

TAMIL LANGUAGE PRIMARY 4 - 2013

PAPER 1 – COMPOSITION

Name: ____________________ Marks : _____/20

Class : 4 /_____ Parent's Signature :_______________


Date :

Duration : 40 min

---

குறிப்பு :

1. படத்தொடரைப் பார்த்துக் கதை / கட்டுரை எழுதவும்.
2. குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கவும்.
3. எழுதியபின் விடையைச் சரிபார்க்கவும்.




| | |
|---|---|
| விடுமுறை | திரைத்துணி |
| தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் | தீப்பற்றியது |
| பிடிக்கவில்லை | பயந்துவிட்டனர் |
| முகாம் | தீயணைப்பாளர் |
| கூடாரம் | ஏசினார் |
| தீப்பெட்டி | தீவற்றை |

P4 SA2

PRIMARY SCHOOL
SEMESTRAL ASSESSMENT 2 (        )
TAMIL LANGUAGE
PRIMARY 4

Name : ______________________          Marks : _____/

Class : 4/____          Parent's Signature : __________

Date :

Duration :

---

குறிப்பு :

1 எல்லா கேள்விகளுக்கும் விடை எழுதுக.
2. தேர்வை எழுதி முடித்தவுடன் விடைகளைச் சரிபார்க்கவும்.
3. குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கவும்.

**Primary School**
**Semestral Assessment 2**
**Tamil Language**
**Primary 4**

சரியான வேற்றுமை உருபை ஏற்ற சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. (5 மதி)

காந்தியடிகள் சிறுவனாக இருந்தபோது நேர்மையைக் கடைபிடித்தார். ஒருநாள் வகுப்பறைக்கு வந்த தலைமை ஆசிரியர் ________(1)________ சில கேள்விகள் கேட்டார். ________(2)________ கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை. வகுப்பாசிரியர் சரியான ________(3)________ சைகை செய்து காட்டினார். ஆனால் காந்தியடிகள் பதிலைக் கூறாமல் ________(4)________ தெரியவில்லை என்று ஒப்புக்கொண்டார். தலைமை ஆசிரியர் ________(5)________ நேர்மையைப் பாராட்டினார். ஆனால் வகுப்பாசிரியர் ஏன் நேர்மையாக நடந்துகொள்ளவில்லை என்று காந்திக்கு வருத்தம்.

1. (1) மாணவர்களுடன்
   (2) மாணவர்களிடம்
   (3) மாணவர்கள் ( )

2. (1) காந்தியை
   (2) காந்தியிடமிருந்து
   (3) காந்தியால் ( )

3. (1) பதிலை
   (2) பதிலுக்கு
   (3) பதிலின் ( )

4. (1) தனக்கு
   (2) தன்னை
   (3) தன்னோடு ( )

5. (1) அவருடைய
   (2) அவரில்
   (3) அவரிடம் ( )

செய்யுள் / பழமொழி (5)

**கீழ்க்காணும் செய்யுளை / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகச் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை நீள்வட்டத்தில் நிழலிடு.**

6. அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து ______________.

1. வழிதல் 2. உரைத்தல்
3. மொழிதல் 4. அடங்கல் ( )

7. ______________ செம்பொன் தன்னொளி கெடாது.

1. புகினும் 2. சுடினும்
3. தரினும் 4. ஒளிரும் ( )

8. ஆழம் ______________ காலை இடாதே.

1. ஆராயாமல் 2. காணாமல்
3. அறியாமல் 4. தெரியாமல் ( )

9. ஐந்திலே ______________ ஐம்பதில் வளையுமா?

1. வணங்காதது 2. கேட்காதது
3. இணங்காதது 4. வளையாதது ( )

10. இளமையில் கல்வி ______________ எழுத்து.

1. நூலில் 2. சிலையில்
3. தாளில் 4. முதுமையில் ( )

## தெரிவுவிடைக் கருத்தறிதல்
## பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

ஒரு காட்டில் மரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தில் பழங்கள் காய்ப்பதே இல்லை. இதை நினைத்து மரம் வருத்தப்பட்டது. வெறும் இலைகளைப் பார்த்து ஏக்கம் அடைந்தது. இதை ஒரு தேவதை **கண்ணுற்றது**. அது மரத்திற்கு உதவி செய்ய விரும்பியது. ஒருநாள் அந்த மரம், "எனக்குத் தங்கப்பழங்கள் இருந்தால் நன்றாக இருக்குமே," என்று கூறியது. இதை அறிந்த தேவதை அந்த மரத்தின் முன் தோன்றியது. அது மரத்தைப் பார்த்து, "உன் ஆசைபோலத் தங்கப்பழங்கள் தொங்கட்டும்," என்று வரம் கொடுத்தது.

மரம் மகிழ்ச்சி அடைந்தது. ஆனால், மறுநாளே அதற்கு ஆபத்து வந்தது. அந்த வழியாக வந்த திருடன் ஒருவன் மரத்திலிருந்த தங்கப்பழங்களை எல்லாம் **களவாடிச்** சென்றான். மரம் பழையபடி கனிகள் இல்லாமல் மொட்டையாகிவிட்டது. இந்த முறை மரம், வெள்ளிப்பழம் இருந்தால் நல்லது என்று தேவதையிடம் கூறியது. மறுநாள், மரத்தில் தோன்றிய வெள்ளிப்பழங்களைத் திருடன் மீண்டும் களவாடினான். அவற்றை எல்லாம் விற்று பணக்காரனானான். மரம் தேவதையைப் பார்த்து, "எனக்கு வெள்ளிப்பழங்களுக்குப் பதிலாக கண்ணாடி பழங்கள் இருந்திருந்தால் ஆபத்து வந்திருக்காது," என்று கூறியது. தேவதை மீண்டும் அதனுடைய ஆசையை நிறைவேற்றியது. உடனே, மரத்தில் கண்ணாடிப்பழங்கள் தொங்கின. பாவம் மரம்! சிறிது நேரம் கழித்து, பலத்த காற்று வீசியது. கண்ணாடிப்பழங்கள் எல்லாம் கீழே விழுந்து நொறுங்கின.

கவலைப்பட்ட மரம் பேராசை கொள்ளக்கூடாது என்பதை உணர்ந்தது. "தயவுசெய்து, எனக்குச் சாதாரண பழங்களைக் கொடு," என்று தேவதையிடம் **வேண்டியது**. மரத்தில் பழங்கள் தோன்றின. அங்கே வந்த சிறுவர்கள் பழங்களைப் பறித்து உண்டார்கள். மரம் இம்முறை கவலைப்படவில்லை. பழங்கள் அவர்களுக்குப் பயனுள்ளதாக இருந்ததை எண்ணித் திருப்தி அடைந்தது.

**Q10 முதல் Q13 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், அதன் எண்ணை அடைப்பினுள் எழுது.** (4 மதிப்பெண்கள்)

Q11 மரம் ஏன் கவலைப்பட்டது?

(1) காட்டில் வளர்ந்ததால்
(2) பழங்கள் காய்க்காமல் இருந்ததால்
(3) தேவதையைக் கண்டதால்
(4) இலைகள் கொண்டிருந்ததால் ( )

Q12 காட்டு வழியாக வந்த திருடன் என்ன செய்தான்?

(1) தேவதையைக் கண்டான்
(2) பழங்களைப் களவாடினான்
(3) பழங்களை உண்டான்
(4) மரத்தை விற்றான் ( )

Q13 . மரத்திலிருந்த பழங்கள் எப்போது விழுந்து நொறுங்கின?

(1) கடும் வெயிலாக இருந்தபோது
(2) கனத்த மழை பெய்தபோது
(3) தேவதை வரம் கொடுத்தபோது
(4) பலத்த காற்று வீசியபோது ( )

Q14. எந்தப் பழம் யாருக்கும் பயன் அளிக்காது ?

(1) சாதாரணப்பழம்
(2) வெள்ளிப்பழம்
(3) கண்ணாடிப்பழம்
(4) தங்கப்பழம் ( )

சொற்பொருள்

Q14 முதல் Q16 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், சரியான எண்ணை அடைப்பினுள் எழுது. (6 மதிப்பெண்கள்)

Q15. கண்ணுற்றது
(1) கேட்டது
(2) நினைத்தது
(3) அறிந்தது
(4) பார்த்தது ( )

Q16. களவாடி
(1) திருடி
(2) பறித்து
(3) எடுத்து
(4) பொறுக்கி ( )

Q17. வேண்டியது
(1) ஆணையிட்டது
(2) கெஞ்சியது
(3) அழுதது
(4) எண்ணியது ( )

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் (4 ம.பெ)

சுவரொட்டியைப் படி. சரியான விடையின் எண்ணை அடைப்பினுள் எழுது.

மறுபயனீட்டின் அவசியத்தை மாணவர்களிடம் ஏற்படுத்த

# மறுபயனீட்டுத் தினம்

ஏற்பாடு : கெங் செங் தொடக்கப்பள்ளித் தேசியக் கல்வி மன்றத்தினர்

நாள் : செப்டம்பர் 10ம் தேதி (புதன்கிழமை)

இடம் : கெங் செங் தொடக்கப்பள்ளி மண்டபத்தில்

மாணவர்களே! அன்றைய தினம் பிளாஸ்டிக் போத்தல்களைப் பள்ளிக்கு எடுத்து வந்து பள்ளி மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள பெரிய பெட்டிகளில் போடுங்கள்.

பிளாஸ்டிக் போத்தல்களைப் பெட்டியில் போடுவதற்கு முன் அவற்றைச் சுத்தமாகக் கழுவிவிட மறந்துவிடாதீர்கள்.

சேகரிக்கப்பட்ட போத்தல்கள் அனைத்தும் மறுபயனீட்டுத் தொழிற்சாலைக்கு அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு அனுப்பப்படும் ஒவ்வொரு போத்தலுக்கும் 10 காசு வழங்கப்படும்.

சேர்க்கப்படும் பணம் பள்ளியில் உள்ள வசதி குறைந்த மாணவர்களின் செலவுக்குப் பயன்படுத்தப்படும்.

கேள்விகள்

18. மறுபயனீட்டுத் தினத்தின் ஏற்பாட்டாளர் யார்?

(1) ஆசிரியர்கள்
(2) தேசியக் கல்வி மன்றம்
(3) மாணவர்கள் ( )

19. மாணவர்கள் என்ன செய்யவேண்டும்?

(1) பிளாஸ்டிக் போத்தல்களை வாங்கவேண்டும்
(2) பிளாஸ்டிக் போத்தல்களைச் சேகரிக்கவேண்டும்
(3) பிளாஸ்டிக் போத்தல்களைக் கொண்டுவரவேண்டும் ( )

20. மாணவர்கள் எதை ஞாபகம் வைத்திருக்கவேண்டும்?

(1) பிளாஸ்டிக் போத்தலைக் கொண்டு வருவதை
(2) பிளாஸ்டிக் போத்தலைக் கழுவிவிட்டுப் பெட்டியில் போடுவதை
(3) அன்று பள்ளிக்கு வருவதை ( )

21. பெரிய பெட்டிகள் எங்கே வைக்கப்படும்?

(1) பள்ளி மண்டபத்தில்
(2) தொழிற்சாலையில்
(3) உணவகத்தில் ( )

பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன எண்ணை அடைப்பினுள் எழுது. ( )

22. நீ அந்தத் தாளைக் ______________________.

1) கிளி 2) கிழி ( )

23. அவ்வழியாக நடந்து வந்த __________ குழியில் விழுந்தது.

1) கரி 2) கறி ( )

24. __________ பாம்பைக் கடித்துக் கொன்றது.

1) கீரி 2) கீறி ( )

25. அரசனின் ______________ கீழே விழுந்தது.

1) வால் 2) வாள் ( )

26. என் தந்தை ஒரு காவலராகப் ______________ புரிகிறார்.

1 பணி 2. பனி ( )

27. எனக்கு மல்லிகை மலரின் ______________ மிகவும் பிடிக்கும்.

1 மனம் 2. மணம் ( )

28 அத்தை கொண்டு வந்த பையின் ______________ அதிகம்.

1 கனம் 2. கணம் ( )

29. உடல் ஆரோக்கியம் பெற __________ சாப்பிட வேண்டும்.

1 பழம் 2. பலம் ( )

30 . இரவில் சரியான ______________ இல்லாமல் படிக்கக் கூடாது.

1 ஒளி 2. ஒலி ( )

## முன்னுணர்வுக் கருத்தறிதல்

**கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குச் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10)**

ஒரு முறை, வீரர்களான பாபுவுக்கும் சோமுவுக்கும் இடையே சண்டை ஏற்பட்டது. 31. ( ) தாங்களே தைரியம் மிக்கவன் என்று சண்டையிட்டனர். கோபம் தாங்கமுடியாமல், ஒருவரை ஒருவர் 32. ( ) தொடங்கினார்கள். இதைக் கண்ட அவர்களுடைய நண்பர்கள் அவர்களின் சண்டையை நிறுத்த முயற்சி செய்தார்கள். மிகவும் கஷ்டப்பட்டு, அவர்களைப் பிரித்தனர். சண்டையிட்டதற்காக, பாபுவும் சோமுவும் நீதிபதிக்கு முன்னால் அழைத்து செல்லப்பட்டனர். நீதிபதி அவர்கள் அங்கு வந்ததற்கான 33. ( ) கேட்டார். நீதிபதி அவர்கள் கூறிய காரணத்தைக் கேட்டவுடன் அவர் `கல கல` என்று 34. ( ). உடனே, அவர் அந்த வீரர்களுக்குச் சரியான 35. ( ) கற்க நினைத்தார். இருவரையும் ஒரு வாரம் சிறையில் அடைத்தார். தவற்றை உணர்ந்த பாபுவும் சோமுவும் வெட்கமடைந்தனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | கதையை | 2. | கண்டிக்க |
| 3. | எழுத்தை | 4. | காரணத்தை |
| 5. | இருவரும் | 6. | சிரித்தார் |
| 7. | பாடத்தை | 8. | முறைக்க |

சுயவிடைக் கருத்தறிதல்

கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படி. கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. (9 மதிப்பெண்கள்)

ஓர் ஊரில் விறகுவெட்டி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தினமும் விறகு வெட்ட காட்டுக்குச் சென்றான். வழக்கம்போல் ஒரு நாள் அவன் விறகு வெட்டுவதற்காகக் காட்டுக்குச் சென்றான். அங்கே வேடன் விரித்திருந்த வலையில் கழுகு ஒன்று சிக்கித் தவிப்பதைப் பார்த்தான். அதன் கதறலைக் கேட்டு விறகுவெட்டி இரக்கப்பட்டு அதை வலையிலிருந்து விடுவித்தான். கழுகு மகிழ்ச்சியுடன் பறந்து சென்றது.

சில நாட்கள் சென்றன. காட்டுக்குச் சென்ற விறகுவெட்டி விறகுகளை வெட்டிக்கொண்டிருந்தான். சிறிது நேரம் கழித்து அவனுக்கு பசி எடுத்தது. அதனால் அருகிலிருந்த பாறையில் அமர்ந்து தான் கொண்டு வந்த உணவைச் சாப்பிடலாம் என்று நினைத்தான்.

அவ்வழியாக அவன் காப்பாற்றிய கழுகு வந்தது. அது அவனுடைய சாப்பாட்டுப் பொட்டலத்தைத் தூக்கிக் கொண்டு பறந்தது. அவன் கழுகை விரட்டிக்கொண்டு ஓடினான். சிறிது தூரம் பறந்து சென்ற கழுகு ஒரு மரத்தில் உட்கார்ந்தது. அப்போது ஒரு பயங்கரமான ஓசைக் கேட்டு விறகுவெட்டி திரும்பிப் பார்த்தான். அவன் அமர்ந்திருந்த பாறை உருண்டு பின்னால் இருந்த பள்ளத்தில் விழுவதைக் கண்டான். அதற்குப் பிறகு கழுகு அருகே வந்து சாப்பாட்டுப் பொட்டலத்தைப் போட்டது. இதைப் பார்த்த விறகுவெட்டி, கழுகு காப்பாற்றாமல் இருந்திருந்தால் தான் இறந்திருப்பான் என்று நினைத்து மனம் கலங்கினான். விறகுவெட்டி கழுகிற்கு நன்றி சொன்னான்.

விடை எழுதுக:

19. விறகுவெட்டி தினமும் விறகு வெட்ட எங்கே சென்றான்? (1 ம.பெ)

20. விறகுவெட்டி ஏன் கழுகை வலையிலிருந்து விடுவித்தான்? (2 ம.பெ)

21. விறகுவெட்டி ஏன் கழுகை விரட்டிக் கொண்டு ஓடினான்? (2 ம.பெ)

22. விறகுவெட்டி திரும்பிப் பார்த்தபோது எதைக் கண்டான்? (2 ம.பெ)

23. விறகுவெட்டி ஏன் மனம் கலங்கினான் ? (2 ம.பெ)

## <u>விடைகள்</u>

## P4
## TESTPAPER 12

| | | | | |
|---|---|---|---|---|
| 1. (2) | 2. (3) | 3. (1) | 4. (1) | 5. (1) |
| 6. (4) | 7. (2) | 8. (3) | 9. (4) | 10. (2) |
| 11. (2) | 12. (2) | 13. (4) | 14. (1) | |
| 15. (4) | 16. (1) | 17. (2) | | |
| 18. (2) | 19. (3) | 20. (2) | 21. (1) | |
| 22. (2) | 23. (1) | 24.(1) | 25.(1) | |
| 26. (1) | 27. (2) | 28. (1) | 29. (1) | 30. (1) |
| 31. (5) | 32. (8) | 33. (4) | 34. (6) | 35. (7) |

விறகுவெட்டி தினமும் விறகு வெட்ட காட்டுக்குச் சென்றான்..

கழுகு ஒன்று வேடன் விரித்திருந்த வலையில் சிக்கித் தவித்துக் கத்திக் கொண்டிருந்தது. இதைப் பார்த்த விறகுவெட்டி அதன் மேல் இரக்கப்பட்டதால் அதை விடுவித்தான்.

கழுகு விறகுவெட்டியின் உணவுப் பொட்டலத்தைத் தூக்கிக்கொண்டு பறந்து சென்றதால் விறகுவெட்டி கழுகை விரட்டிக் கொண்டு ஓடினான்.

விறகுவெட்டி அமர்ந்திருந்த பாறை உருண்டு பின்னால் இருந்த பள்ளத்தில் விழுவதைக் கண்டான்.

கழுகு தன்னைக் காப்பாற்றாமல் இருந்திருந்தால் தான் இறந்திருப்பான் என்று நினைத்து மனம் கலங்கினான்.